**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of civil procedure)**

**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**

**KEERANUR**

**CASE NO.OS.No.52/2022**

**Depostition of witness of Plaintiff – P.W.2(நீலா)**

**05.09.2023**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. என்னை யார் சாட்சி அழைத்து வந்தார்கள்என்றால் எனது மகளுக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். வழக்கு விவரம் எனக்கு நேரடியாக தெரியும். வாதிக்கும் பழனியம்மாளின் கணவருக்கும்தான் வரவு செலவு இருந்தது என்றால் சரியல்ல. வாதியிடம் பழனியம்மாளும் ராமசாமியும், பூர்த்தி செய்யப்படாத கேட்பு கடனுறுதி சீட்டு மற்றும் ரூ.20, ரூ.50 வெற்று பத்திரங்கள் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பழனியம்மாளை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள ராமசாமி என்பவரை எனக்கு தெரியாது. ராமசாமி எப்படி பத்திர அலுவலகத்திற்கு வந்தார் என்றால் பிரதிவாதி சார்பாக வந்தார். சாட்சி கையெழுத்து போட்டுள்ள ஆண்டப்பன் எங்களுக்கு உறவு முறையா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண்.18/1A ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எனது மகள் செய்து வரும் வரவு செலவு பற்றி எனக்கு தெரியுமா என்றால் அவர் வெளியில் வரவு செலவு எதுவும் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது மகளின் கையெழுத்து அல்ல. பிரதிவாதியை எங்களுக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் தாவா சொத்து சம்பந்தமாக பேசும் போதுதான் தெரியும். பிரதிவாதிக்கு வாதி பணம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். அப்போது வாதி, பிரதிவாதி ஆண்டப்பன், ராமசாமி மற்றும் வக்கீல் வீரமணி இருந்தார்கள். பிரதிவாதி எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் தேராவூரைச் சேர்ந்தவர். நான் விராலிமலையில் வசித்து வருகிறேன். தேராவூரில் இருந்து விராலிமலை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 கி.மீ. தூரம் இருக்கும். பிரதிவாதிக்கும் வாதிக்கும் இடையே என்ன பரிவர்த்தனை நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. நான் சாட்சி கையெழுத்து மட்டும்தான் போட்டேன். வா.சா.ஆ.1 பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட மட்டும் சென்றேன். அதற்கு முன்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்திற்கு எனது மகள் தான் விவரம் சொன்னார். வா.சா.ஆ–1 பத்திரத்தில் எனது மகள் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டார். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு பிரதிவாதி எவ்வித ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து

சம்பந்தமாக வாதி பிரதிவாதிக்கு இடையே எவ்வித பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என்றும் பிரதிவாதி வாதியிடம் இருந்து எவ்வித முன் பணமும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பழனியம்மாள் அவரது கணவர் மற்றும் வாதி இடையே மட்டும்தான் வரவு செலவு இருந்தது என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் நபரை தெரியுமா என்றால் தெரியாது. எனது மகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை.)

C RAJESH
Digitally signed by C RAJESH
Date: 2023.09.05 17:46:29 +0530